Date – 16.02.2026

Karthikeyan Petitioner/Accused

Vs

Vinay Vignesh Sidharth Petitioner/Complainant

**MP No**.9/2025 & 10/2025 **in STC** 23/2023

145(2) **of NI ACT Petition**

**பொது உத்தரவு**

1) அசல் ஆவணங்களின் பரிசீலனையில், தற்போது வழக்கானது கடந்த 30.12.2025 அன்று தீர்ப்புரை பகருவதற்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், கடந்த 24.12.2025 அன்று மேற்படி மனுக்களை மனுதாரர் / எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், கடந்த 02.09.2025 அன்று ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்துள்ளதாகவும், அன்றைய தேதியில் சில முக்கியமான வழக்கிற்கு தேவையான கேள்விகளை ம.சா.1-யிடம் கேட்க முடியாமல் போனதாகவும், வழக்கிற்கு தேவையான சில ஆவணங்கள் வேறு சில

வழக்கு கோப்புகளுடன் கலந்து விட்டதாகவும், அதனால் மேற்படி சில ஆவணங்களை இவ்வழக்கில் குறியீடு செய்ய முடியாமல் போனதாகவும், அதனால், தற்போது மனுதாரர் / எதிரி தரப்பில் நல்ல வழக்கு மூலம் உள்ளதால், ம.சா.1 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்பதற்காக மேற்படி மனுக்களை மனுதாரர்/எதிரி தாக்கல் செய்துள்ளதாக எடுத்துரைத்துள்ளதும் தெரிய வருகிறது.

2) மேலும் எதிர்மனுதாரர் / புகார்தாரர் தரப்பு பதிலுரையில், மேற்படி மனுச்சங்கதிகளை மறுத்து, பொய்யானவை என்றும், சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லை என்றும், இவ்வழக்கை மேலும் காலதாமதப்படுத்தும் நோக்கில் மேற்படி மனுக்களை தாக்கல் செய்துள்ளதாகவும், கடந்த 09.11.2023 அன்று மனுதாரர்/எதிரி தரப்பில் ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று கோரி மனு எண்.7455/2023 தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 15.12.2023 அன்று மேற்படி மனுவானது அனுமதிக்கப்பட்ட நிலையில், மனுதாரர்/எதிரி தரப்பிற்கு போதிய வாய்ப்புகள் கொடுக்கப்பட்டும், கடந்த 18.09.2024

வரை ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்ததாகவும், மீண்டும் மனுதாரர்/எதிரி தரப்பில் ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று கோரி மனு எண்கள். 4/2025 மற்றும் 5/2025 ஆகியவை தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுக்களானது கடந்த 18.06.2025 அன்று அனுமதிக்கப்பட்டதாகவும், கடந்த 02.09.2025 அன்று மனுதாரர்/எதிரி தரப்பில் ம.சா.1 முழுவதுமாக குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் மனுதாரர்/எதிரி தரப்பில் சாட்சியங்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டதால், வழக்கானது வாதுரை நிலைக்கு சென்றதாகவும், கடந்த 17.11.2025 அன்று எதிர்மனுதாரர் / புகார்தாரர் தரப்பு வாய்மொழியான வாதுரை கேட்கப்பட்டு, மனுதாரர்/எதிரி தரப்பிலான வாதுரைக்கு வாய்தா போடப்பட்டதாகவும், கடந்த 21.11.2025, 01.12.2025 மற்றும் 08.12.2025 அன்று ஆகிய தேதிகளில் மனுதாரர்/எதிரி தரப்பிற்கு வாய்ப்புகள் கொடுக்கப்பட்டும், அவற்றை பயன்படுத்தாமல் இருந்ததாகவும், அதனால் இந்நீதிமன்றத்தால் கடந்த 30.12.2025 அன்று தீர்ப்புரைக்காக வாய்தா போடப்பட்டதாகவும், மனுதாரர்/எதிரி தரப்பில் இவ்வழக்கில்

வாய்மொழியான வாதுரை செய்யாமல், வேண்டுமென்றே வழக்கை இழுத்தடிக்கும் நோக்கில் இதுபோன்ற மனுக்களை தாக்கல் செய்துள்ளதாகவும், அதனால் மேற்படி மனுக்களை அதிக செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் மறுத்துரைக்கப்பட்டுள்ளது.

3) இந்நிலையில், மேற்படி சங்கதிகளுக்குட்பட்டு, இம்மனுக்கள் அனுமதிக்கத்தக்கதா? என்று பார்க்கும் பொழுது, கடந்த 2023 ல் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில் எதிர்மனுதாரர் / புகார்தாரர் எடுத்துரைத்துள்ளது போன்று பல்வேறு வாய்ப்புகள் இந்நீதிமன்றத்தால் மனுதாரர்/எதிரிக்கு வழங்கப்பட்டும், மனுதாரர்/எதிரி தாக்கல் செய்த மனுக்களின் அடிப்படையிலும் கடந்த 02.09.2025 அன்று ம.சா.1 ஐ முழுவதும் குறுக்கு விசாரணைசெய்து முடிக்கப்பட்டு வழக்கில் தங்கள் தரப்பில் சாட்சிய விசாரணை இல்லை என்று எடுத்துரைத்தன் அடிப்படையில் மனுதாரர்/எதிரி சாட்சிய தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு வாதுரைக்காகவும் மனுதாரர்/எதிரிக்கு பல்வேறு வாய்ப்புகள் கொடுக்கப்பட்டு வழக்கானது 30.012.2025 ல் தீர்ப்புரை

பகரப்படுவதற்காக நிலுவையில் இருந்தபோது மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்த முன்னெடுப்பு மனுவின் அடிப்படையில் இம்மனுக்கள் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, தற்போது வரை நிலுவையில் இருந்துள்ளது தெரிய வருகிறது.

4) மேலும் ஆவணங்களின் பரிசீலனையில், ம.சா.1 ஆன புகார்தாரர் தன்னை சாட்சியத்திற்குட்படுத்திக்கொண்ட உடனேயே எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாமல், காலம் கடந்து பல்வேறு வாய்தாக்கள் சென்ற நிலையில் குறுக்கு விசாரணை செய்துள்ளது தெரிய வரும் போது, தற்போது முக்கியமான கேள்விகள் ம.சா.1 யிடம் கேட்காமல் விடுபட்டுவிட்டதாக சொல்வது வழக்கில் மனுதாரர்/எதிரிக்கு ஏற்படும் பாதகமான சூழ்நிலையை சரிபடுத்தும் வகையில் கோரப்படுகிறதோ என்று இந்நீதிமன்றத்திற்கு தோன்றுகிறது.

5) மேலும் மனுதாரர் தரப்பில் , வழக்கிற்கு தேவையான சில ஆவணங்கள் வேறு சில வழக்கு கோப்புகளுடன் கலந்து விட்டதாகவும், அதனால் மேற்படி சில ஆவணங்களை இவ்வழக்கில் குறியீடு செய்ய முடியாமல்

போனதாகவும்,குறிப்பிட்டிருந்தாலும் எவ்வகையான ஆவணங்களை தாக்கல் செய்ய போகிறார் என்ற விவரத்தை மனுவில் குறிப்பிட்டு சொல்லாததததாலும், பல்வேறு வாய்ப்புகள் இருந்தும், மேற்படி காலக்கட்டத்தில் மேற்படி ஆவணம் குறித்து குறிப்பி ட்டு சொல்லாமல் ம.சா. 1 ஆன சாட்சியைமீண்டும் மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று சொல்வது சாட்சியை அலைக்கழிக்க வேண்டும் என்ற நோக்கில் என்பதால் மனுதாரர் மனுவில் எடுத்துரைக்கும் காரணம் ஏற்புடையதாக அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

6) மனுதாரர் மனுவில் எடுத்துரைத்த காரணம் இந்நீதிமன்றத்தால் ஏற்புடையதல்ல என்பதால் மனு நீதியின்பால் அனுமதிக்கதக்கது அல்ல என்று இந்நீதிமன்றத்தால் செலவு தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

(ஒப்பம்) பி. சர்மிளா, பி.பி.ஏ., பி.எல்.,

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம் எண்.1 (நடுவர் நிலை),
கோயமுத்தூர்.